# துவாக்குடி நகராட்சி

| மன்ற கூட்ட நாள் | தீர்மான எண் | பொருள் | அலுவலகக் குறிப்பு |
|---|---|---|---|
| ***2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06-ம் தேதி வியாழன் கிழமை*** *காலை 10.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் கீழ்க்கண்ட பொருள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக்கூட்டம் நடைபெறும்.* | | | |
| 06.04.23 | 178 | **<u>பொருள் எண்.1</u>**<br>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழக சட்டமன்ற பேரவையில் விதி எண். 110 ன் கீழ் அரசு துவக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலை சிற்றுண்டி வழங்க அறிவிப்பு வெளியிடப்பட்டு 15.09.2022ல் திட்டம் தொடங்கப்பட்டு 28.02.2023ல் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது. தற்போது விடுபட்டுள்ள நகராட்சிகளில் மேற்படி காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டம் செயல்படுத்துவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17404/2022/எம்-1 நாள்.10.03.2023ல் தெரிவித்துள்ளபடி, துவாக்குடி நகராட்சிக்குட்பட்ட 3 அரசு தொடக்கப்பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குவதற்கு வார்டு எண் 15 முத்துராமலிங்க தேவர் சாலை பகுதியில் புதிதாக ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.25.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தமிழக அரசின் இத்திட்டத்தை உடன் செயல்படுத்த வேண்டியதன் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர் நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளிகள் கோரிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். இ1/387/2023** | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>179<br><br><br><br><br><br><br><br>180</td>
<td>
<u>பொருள் எண்.2</u>
நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களுக்கான வரையறை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்துதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறை நாள்.23.01.2023 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு:மன்றம் பதிவு செய்யலாம்.
ந.க.எண்.412/2023/சி1
<u>பொருள் எண்.3</u>
துவாக்குடி நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பை சேகரிக்கும் பணிகளை Service Provider/Agency/Contractor மூலம் மூன்று ஆண்டுகளுக்கு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.35295/2022/EA2-SWM-14 நாள்.10.01.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படியும் மேற்கண்ட பணியை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.157 நாள்.25.01.2023-ன் அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து 24.03.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன்விபரம் பின்வருமாறு,
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th></tr>
<tr><td>1</td><td>M/s. Jayaram Ventures</td></tr>
<tr><td>2</td><td>M/s. Skyline Construction</td></tr>
</table>
அவ்வாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதி ஒப்பந்தப்புள்ளி உறைகளை (Technical Bid) 24.03.2023ல் திறக்கப்பட்டு தொழில்நுட்ப தகுதியினை கூர்ந்தாய்வு செய்ததின் விபரம் பின்வருமாறு
</td>
<td>அனுமதிக்கப்ப ட்டது.<br><br><br><br><br><br><br><br>அனுமதிக்கப்ப ட்டது.</td>
</tr>
</table>

181

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தகுதி விபரம் |
|---|---|---|
| 1 | M/s. Jayaram Ventures | தொழில்நுட்ப அனுமதி ஏற்புடையது |
| 2 | M/s. Skyline Construction | தொழில்நுட்ப அனுமதி ஏற்புடையது |

அவ்வாறு தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகளை (Price bid) 27.03.2023 அன்று திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்ததின் விபரம் பின்வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s. Jayaram Ventures | டன் ஒன்றுக்கு ரூ.3340.00/- மட்டும் |
| 2 | M/s. Skyline Construction | டன் ஒன்றுக்கு ரூ.3340.91/- மட்டும் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/s.Jayaram Ventures ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.088/2023/எச்1**

**<u>பொருள் எண்.4</u>**

துவாக்குடி நகராட்சி கடந்த 2010ஆம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அலுவலகப்பணிகளுக்கான வாங்கி பயன்படுத்தப்பட்டு வந்த கணினிகள் 10 வருட காலத்திற்கு மேலாக இயங்கி வருவதால் தற்போது கணினிகள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. தற்போது மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களது ஆய்வுகூட்டங்களின் அடிப்படையில் உடனுக்குடன் அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதால் கணினியில் முக்கியத்துவம் கருதி புதியதாக கணினிகள் வாங்குவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.4.80 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். இ1/434/2023**

அனுமதிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | 182 | **<u>பொருள் எண்.5</u>**<br>துவாக்குடி நகராட்சி கடந்த 2010ஆம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அலுவலகப்பணிகளுக்கான வாங்கி பயன்படுத்தப்பட்டு வந்த கணினிகள் 10 வருட காலத்திற்கு மேலாக இயங்கி வருவதால் தற்போது கணினிகள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, மேற்படி கணினியில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்து புதுபிப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். இ1/434/2023-1** | அனுமதிக்கப்பட்டது. |
| | 183 | **<u>பொருள் எண்.6</u>**<br>துவாக்குடி நகராட்சி பகுதிகளில் உள்ள தெருக்களில் விடுபட்டுள்ள வார்டு எண்.4,5,6,7,9,10,11,13,15 மற்றும் 21 ஆகிய பகுதிகளில் புதிதாக பெயர் பலகை வைப்பதற்கும், ஏற்கனவே உள்ள பழுதடைந்துள்ள பெயர் பலகைகளை மாற்றி அமைப்பதற்கும் உத்தேச மதிப்பீடு ரூ.9.90 மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். இ1/435/2023** | அனுமதிக்கப்பட்டது. |
| | 184 | **<u>பொருள் எண்.7</u>**<br>தமிழ் இனத்திற்காகவும், தமிழ் மொழிக்காகவும் தன் வாழ்நாள் முழுவதும் அயராது பாடுபட்ட தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர்.கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தங்கமணி மாளி சுற்றியார் சாலையில் டாக்டர்.கலைஞர் பிறந்தநாள் நூற்றாண்டு விழா நுழைவுவாயில் அமைப்பதற்கு இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். இ1/436/2023** | அனுமதிக்கப்பட்டது. |
| | 185 | **<u>பொருள் எண்.8</u>**<br>துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அறை, பொதுப்பிரிவு, கணினிப்பிரிவு, காணொலிக்காட்சி ஆய்வுக்கூட்ட அறைகளில் குளிர்சாதன பெட்டி புதியதாக வாங்கி பொருத்தும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் | அனுமதிக்கப்பட்டது. |

மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். இ1/437/2023**

**<u>பொருள் எண்.9</u>**

186 துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட வாகனங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், தினக்கூலி அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை (OUT SOURCING) முறையில் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஓட்டுநர்களை நகராட்சிக்கு வழங்க இந்நகர்மன்ற தீர்மான எண்.671 நாள்:29.10.2021ம் தேதியில் 31.03.2023 வரை அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்கண்ட அனுமதி 31.03.2023ம் தேதியுடன் முடிவடைவதால் 01.04.2023 முதல் 30.09.2023 வரையிலான 6 மாத காலத்திற்கு இந்நகராட்சிக்கு ஓட்டுநர்களை வழங்குவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.9.90 இலட்சத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மேலும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அனுமதிக்கப்பட்டது.

| வ.எண். | வாகனத்தின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஈப்பு வாகனம் | 3 |
| 2 | தண்ணீர் லாரி | 1 |
| 3 | LCV (TATA ACE) | 2 |
| 4 | டிப்பர் லாரி | 1 |
| 5 | JCB | 1 |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்**.284/**எச்**1/2021

**<u>பொருள் எண்.10</u>**

187 துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் தற்போது குடிநீர் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருவதால் ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக குழாய்களில் பழுதுகள் ஏற்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் பற்றாக்குறை ஏற்படுவதை சரிசெய்ய பொதுமக்களின் நலன்கருதி வார்டு எண்.21ல் நகராட்சி பழைய மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அருகில்,

அனுமதிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | | மேலத்தெரு வேலு வீடு அருகில், கீழத்தெரு(தேரடி அருகில்) மற்றும் வார்டு எண்.18 மடத்தான் குளம் அருகில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு HDPE டேங்க் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம் | |
| | 188 | **ந.க.எண். இ1/438/2023**<br>**<u>பொருள் எண்.11</u>**<br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் தற்போது குடிநீர் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருவதால் ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக குழாய்களில் பழுதுகள் ஏற்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் பற்றாக்குறை ஏற்படுவதை சரிசெய்ய பொதுமக்களின் நலன்கருதி வார்டு எண்.12 வ.உ.சி நகர் சாலை எண்.6,7,8-ல் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு HDPE டேங்க் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம் | அனுமதிக்கப்பட்டது. |
| | 189 | **ந.க.எண். இ1/439/2023**<br>**<u>பொருள் எண்.12</u>**<br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் தற்போது குடிநீர் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருவதால் ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக குழாய்களில் பழுதுகள் ஏற்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் பற்றாக்குறை ஏற்படுவதை சரிசெய்ய பொதுமக்களின் நலன்கருதி வார்டு எண்.7ல் நேதாஜி தெரு விஸ்தரிப்பு மற்றும் வார்டு எண்.13-ல் மகாசக்தி மாரியம்மன் கோவில் அருகில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு HDPE டேங்க் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம் | அனுமதிக்கப்பட்டது. |
| | 190 | **ந.க.எண். இ1/440/2023**<br>**<u>பொருள் எண்.13</u>**<br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் தற்போது குடிநீர் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருவதால் ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக குழாய்களில் | அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 191 | பழுதுகள் ஏற்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் பற்றாக்குறை ஏற்படுவதை சரிசெய்ய பொதுமக்களின் நலன்கருதி வார்டு எண்.5 அம்பேத்கர் தெரு மற்றும் ஜீவானந்தம் தெருவில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு HDPE டேங்க் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். இ1/441/2023**<br>**<u>பொருள் எண்.14</u>**<br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் தற்போது குடிநீர் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருவதால் ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக குழாய்களில் பழுதுகள் ஏற்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் பற்றாக்குறை ஏற்படுவதை சரிசெய்ய பொதுமக்களின் நலன்கருதி வார்டு எண்.11 திருவள்ளுவர் தெரு, வேம்படி மாரியம்மன் கோவில் அருகில், கோழிப்பண்ணை அருகில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு HDPE டேங்க் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். இ1/442/2023** | அனுமதிக்கப்பட்டது. |

ஆணையர்,
துவாக்குடி நகராட்சி.